## சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2014–2015–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல், நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணை – வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை

அரசாணை (நிலை) எண்.165

நாள்: 30.12.2014
மார்கழி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.80, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 28.10.2011.
2. அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 16.08.2012.
3. அரசாணை (நிலை) எண்.60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 26.06.2013.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் (பயிற்சி)/ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் (FAC), கடிதம் எண்.23783/2013/NEDM-2, நாள் 11.09.2014.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.23783/2013/NEDM-2, நாள் 6.11.2014 மற்றும் 18.11.2014.

**ஆணை:**

மேலே ஒன்று, இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே 2011–12, 2012–13, மற்றும் 2013–2014–ஆம் ஆண்டுகளுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

(த.பி.பா)

**2. 2014–2015–**ஆம் ஆண்டிற்கான வரவு செலவித் திட்ட உரையில் மாண்புமிகு நிதித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் ஏனையவற்றிற்கிடையே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக **2014–2015–**ஆம் ஆண்டிற்கு ரூ.**470** கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.** மேற்குறிப்பிட்டதற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் **2014–2015–**ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் செயற்குறிப்பினை அனுப்பி, அதற்கு ஒப்புதல் அளித்து உரிய ஆணை வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

**4.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) ஒவ்வொரு தொகுதி நிதி ஒதுக்கீடான ரூ.**2,00,00,000/–**ல் (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ''வரையறுக்கப்பட்ட கூறு'' (Tied Component) பணிகளுக்காக ரூ.**1,12,50,000/–** (ரூபாய் ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்), மற்றும் ''வரையறுக்கப்படாத கூறு'' (Untied Component) பணிகளுக்காக ரூ.**87,50,000/–** (ரூபாய் எண்பத்தேழு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கப்படுகிறது.

(ii) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**5.** மேலே பத்தி 4(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – **800** – ஏனைய செலவினங்கள் – JF – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – **16** பெரும் பணிகள்

(த.தொ.கு 4515-00-800-JF 1602) ரூ.**371,30,00,000/–**

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – **789** – ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – JB – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – **16** பெரும் பணிகள்

(த.தொ.கு 4515-00-789-JB 1606) ரூ.94,00,00,000/–

4515-00 - ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – JC – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏனைய திட்டங்களை நிறைவேற்றுதல் – 16 பெரும் பணிகள்

(த.தொ.கு 4515-00-796-JC 1609) ரூ.4,70,00,000/–

6. இந்த ஆணை நிதித் துறையின் அ.சா. எண்.71742/ஊ.வ/14, நாள் 30.12.2014–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அரசு செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்/செயலாளர்–I, சென்னை–9.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.

நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**அரசாணை (நிலை) எண்.165, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை, நாள் 30.12.2014**

## இணைப்பு –1

## 2014–15–ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு பணிகளை கண்டறிந்து அதனை செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அப்பணியினை இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்திட பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி ரூ.1.75 கோடி தொகையானது 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடி தொகையாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ஒதுக்கீடான ரூ.2.00 கோடியில், கீழ்க்காணும் முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.1.125 கோடி “வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக” ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மீதமுள்ள “வரையறுக்கப்படாத கூறு நிதியான” ரூ.87.50 இலட்சத்தில், தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணிகளையும் தங்கள் விருப்பப்படி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யலாம். வழிகாட்டு நெறிமுறைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

### 1. வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.125 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்:–

மேலே குறிப்பிட்டுள்ளபடி, ரூ.1.125 கோடி, வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் செலவு செய்யப்பட வேண்டும்.

1.1 2014-15ம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி/ நகராட்சி/ ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.25.00 இலட்சம் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இதில் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் ஆகியன இதில் அடங்கும்.

1.2 பெரும்பான்மையான அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள், பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதால் அவைகளுக்கு புதிய கட்டடம் கட்டித்தர இந்த அரசால் தீர்மானிக்கப்பட்டு அதனை படிப்படியாக நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அங்கன்வாடி

கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய ரூ.20.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

1.3 இதைத்தவிர அங்கன்வாடி சமையல் அறையை எரிவாயு இணைப்பு (Gas connection) அமைத்து நவீனப்படுத்துவதற்காக, ஓர் அங்கன்வாடி மையத்திற்கு ரூ.6050/- வீதம் ஒருமுறை மட்டும் செலவினம் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தொகுதியில் உள்ள எல்லா தகுதி வாய்ந்த அங்கன்வாடி சமையல் மையங்களை கட்டி முடித்த பிறகு, மீதமுள்ள நிதியை ஒரு மையத்திற்கு ரூ.22,000/- வீதம் சத்துணவு சமையல் மையங்களை நவீனப்படுத்துவதற்கு ஒருமுறை மட்டும் அரசாணை (1D) எண். 68, சமூக நலம் மற்றும் சத்துணவு (ச.உ.தி–3) திட்டத் துறை, நாள். 29.06.2012-ல் வெளியிடப்பட்ட ஆணைக்கிணங்க பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும்.

- அரசாணை (1D) எண். 68, சமூக நலம் மற்றும் சத்துணவு (ச.உ.தி– 3) திட்டத்துறை, நாள். 29.06.2012–ல், 2012-2013-ஆம் ஆண்டில் 32 மாவட்டங்களில் உள்ள 887 சத்துணவு மையங்களின் சமையலறைகளை நவீனப்படுத்த அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மீதம் உள்ள நிலையங்கள் நவீனப்படுத்தப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் இனங்காணப்படும்பட்சத்தில் இத்தொகை பயன்படுத்தப்பட வேண்டும்.

- அங்கன்வாடி மையங்கள் கட்டுதல் / சத்துணவு மையங்களின் சமையல் அறைகள் நவீனப்படுத்துதல் / அங்கன்வாடி சமையல் அறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முற்றிலும் நிறைவுப்பெற்றுள்ள இடங்களில் இப்பணிகள் தேவையில்லாத பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கான சான்றிதழை சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் / திட்ட அலுவலர்(ஒ.கு.வ.தி)யிடமிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ் படிவத்தில் எழுத்துப்பூர்வமாக சான்றிதழ் பெற்ற பின்னர் வரையறுக்கப்பட்ட கூறு நிதிக்கான பணிகளில் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை தேர்வு செய்து கொள்ளலாம். (சான்றிதழ் படிவம் இணைப்பு II ல் கொடுக்கப்பட்டுள்ளது).

1.4 வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் மீதமுள்ள ரூ.57.50 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ. 57.50 இலட்சத்தில் எடுத்துசெய்ய பரிந்துரைக்கலாம்.

a). ஊரகப் பகுதிகளில் :–

1. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்).

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் / அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. கிராம ஊராட்சிகளில் தேவைப்படின் கூடுதல் இடுகாடு / சுடுகாடு அமைத்தல்.

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதனால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

11. பொது விநியோக கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.

b). நகர்ப்புறப் பகுதிகளில் :–

1. சூரிய ஒளி சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல். (மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்).

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள் மற்றும் அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் / அல்லது சுற்றுச்சுவர் கட்டிக்கொடுத்தல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்.

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்.

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

10. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

12. பொது விநியோக கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்கள் வாங்குதல்.

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் / முள் கம்பி வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதினால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பு செய்யலாம்.

**2. வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.87.50 இலட்சத்தில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்:–**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் “எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிகளைத் தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் எடுத்து செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.87.50 இலட்சத்தில் மேற்கொள்ளலாம். பயணிகள் நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**3. எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பணிகளில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் பணிகளை எடுத்து செய்ய இயலாது.

3.1 **மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.**

**விதிவிலக்கு:–**

I. நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

II. அரசாணை நிலை எண்.179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 19.12.2013ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்படாத கூறு நிதியிலிருந்து மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் இதுவரை சுற்றுச்சுவர் கட்டாமல் இருப்பின் இப்பணியினை நடப்பு 2014-15ம் நிதியாண்டில் மேற்கொள்ளலாம்.

3.2 தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல். (விதிவிலக்கு : இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் புதிய வீடுகள் கட்டுதல்)

3.3 **அனைத்து வகையான புதுப்பித்தல் பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல்.**

விதிவிலக்கு – அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2004 வரை கட்டப்பட்ட வீடுகளை, இந்திரா நினைவு குடியிருப்பு (IAY), தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் உட்பட, ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல், இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.4 **அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்:– விதிவிலக்கு :**

(i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(ii) அரசு ஆணை (1டி) எண்.405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 17.08.2010 மற்றும் அரசு கடித (1டி) எண். 653, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 31.12.2012-ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(iii) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்,

(iv) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரிய மின் ஒளிகலன்கள் நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

3.5 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுயநிதி பள்ளிகள், கல்லூரிகளில் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.

3.6 அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்

3.7 மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

3.8 நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

3.9 முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

3.10 அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

3.11 மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

3.12 குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.

3.13 சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

3.14 உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்.

4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீதம் ஊரகப் பகுதிகளில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி மற்றும் நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

5. பணிகளை செயல்படுத்துதல் / தளவாடச் சாமான்களை கொள்முதல் செய்வது ஆகியவை **1998**-ம் ஆண்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், மற்றும் அதன் விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் / இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குத் தேவையான மாறுதல்களை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**ககன்தீப் சிங் பேடி,**
**அரசு செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## அரசாணை (நிலை) எண்.165, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை, நாள். 30.12.2014

## இணைப்பு –II

.......................... மாவட்டத்தில் ............ எண்ணிக்கையுள்ள அங்கன்வாடிகள் வாடகை கட்டிடங்களில் இயங்குகின்றன என சான்றளிக்கப்டுகிறது. இதில் ........ எண்ணிக்கையுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு புதிதாக அங்கான்வாடி கட்டடங்கள் கட்ட போதிய நிலம் உள்ளன.

**அங்கன்வாடி கட்டடங்கள் கட்ட தேவைப்படும் இடங்களின் விவரம்**

| வ.எண் | மையத்தின் பெயர் | கிராம ஊராட்சிகள் / பேரூராட்சிகள்/நகராட்சிகளின் பெயர் | கட்டடத்திற்கு தேவையான நிலத்தின் பரப்பளவு |
|---|---|---|---|
| | | | |

திட்ட அலுவலர் (ஒ.கு.வ.தி)

.......................................மாவட்டம்

**ககன்தீப் சிங் பேடி,**
**அரசு செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்